

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 09.05.2024 | 19. 'தெய்வ தாகம்' இச்சையாகாது, அது நித்திய ஜீவன்! |
|---|---|



'ஆசையே' எல்லா துன்பத்திற்கும், துயரத்திற்கும் வேராயிருக்கிறது என சிலர் கூறுகிறார்கள். இதை உண்மை என்று ஏற்றுக்கொள்வோமென்றால், 'எல்லா ஆசைகளையும்' அழிப்பதே மெய்யான இரட்சிப்பு என நாம் கூறிவிடக்கூடும். அப்படியிருக்குமென்றால் எத்தனையோ நன்மையான விருப்பங்களையும் அகற்றிவிட வேண்டும் என பொருளாகும். அப்படியானால், நித்தியத்திற்குரிய நமது ஏக்கம் மிகுந்த விருப்பமான 'தேவனை முகமுகமாய் சந்திப்போம்' என்ற இனிமையும், 'நித்திய பேரின்பத்திற்குள் நுழைவோம்' என்ற மகிழ்ச்சியான விருப்பமும் அகற்றப்பட வேண்டுமே!? ஒருவர் தாகமாயிருந்தால், "உன் தாகத்தைக் கொன்று விடு" என்று கூறாமல்.... அவருடைய தாகம் தீர்க்க தண்ணீர் கொடுத்து உதவுகிறோம்!

உயிர்தரும் தண்ணீரைத் தந்து ஒருவனுடைய தாகத்தை போக்காமல், 'தாகத்தை' விரட்டியடிக்கலாம் என எண்ணுவது..... 'ஜீவனையே' விரட்டியடிப்பதற்கு சமமாகும்.

இதன் விளைவு, மரணமாயிருக்கலாம்! அது இரட்சிப்பு அல்ல! "எனக்கு தண்ணீர் தேவை!" என்பதை வெளிப்படுத்தும் அறிகுறியே தாகமாகும். மேலும், இந்த தாகம், எங்கோ தண்ணீர் இருக்கிறது என்பதையும், அது தன் தாகத்தை போக்கி திருப்திப்படுத்தும் எனவும் காண்பிக்கிற "நம்பிக்கையின் அடையாளமாயும்" இருக்கிறது!

– ரத்னம்